கலைஞர் 100 1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,　　　　　　　　　　　　　　　　　　　　　தேதி: 20.07.2023
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தேங்காய் மற்றும் கொப்பரை விலைஅதிகரிக்க வாய்ப்பில்லை - தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு பாசன விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின் விலை முன்னறிவிப்புத் திட்டமானது, தேங்காய் மற்றும் கொப்பரைக்கான விலை முன்னறிவிப்பை உருவாக்கியுள்ளது. உலகளவில் இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ் மற்றும் இந்தியா ஆகியவை தென்னை உற்பத்தியில் முன்னணியில் உள்ள நாடுகளாகும். இவை மூன்றும் இணைந்து உலகளாவிய தேங்காய் உற்பத்தியில் 75 சதவீதத்தைக் கொண்டுள்ளன. இந்தியாவில், தென்னை முக்கியமாக கேரளா (7.65 இலட்சம் எக்டர்), தமிழ்நாடு (4.46 இலட்சம் எக்டர்), கர்நாடகா (6.28 இலட்சம் எக்டர்) மற்றும் ஆந்திரப் பிரதேசம் (1.05 இலட்சம் எக்டர்) மற்றும் இந்த நான்கு தென் மாநிலங்கள் சேர்ந்து 2022-23 ஆம் ஆண்டில் நாட்டின் மொத்த உற்பத்தியில் 91 சதவிகிதம் பங்களிக்கின்றன.

தமிழ்நாட்டில், 2022-23 ஆண்டில் தேங்காய் 4.46 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 35.12 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. கோயம்புத்தூர், திருப்பூர், தஞ்சாவூர், திண்டுக்கல் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் தேங்காய் அதிகளவு பயிரிடப்படுகின்றது. வர்த்தக மூலங்களின்படி, கிருஷ்ணகிரி, தர்மபுரி, பொள்ளாச்சி, பல்லடம், ஈரோடு, திருப்பூர், சேலம், காங்கயம் மற்றும் தேனி ஆகிய பகுதிகளில் இருந்து காங்கேயம் சந்தைக்கு வரத்து வருகிறது. மேலும், கர்நாடகா மற்றும் கேரளா ஆகிய மாநிலங்களிலிருந்தும் ஜூன்'23 மாதத்திலிருந்து வரத்து வரத் தொடங்கியுள்ளது.

எண்ணெய் ஆண்டின் முதல் பாதியில் (நவம்பர்'22 - ஏப்ரல்'23) தாவர எண்ணெய், குறிப்பாக பாமாயில் இறக்குமதி அதிகரித்ததாலும், சுத்திகரிக்கப்பட்ட மற்றும் கச்சா சமையல் எண்ணெய்க்கான குறைந்த இறக்குமதி வரி காரணமாகவும் கொப்பரை விலையில் விரைவான சரிவு ஏற்பட்டுள்ளது.

கொப்பரை பதப்படுத்தும் காலத்தில் சீரற்ற மற்றும் உபரி மழை காரணமாக கொப்பரையின் தரம் குறைந்துள்ளதாகவும் வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். தேங்காய் எண்ணெயின் தேவை மற்றும் விநியோக நிலையால் அரைக்கும் கொப்பரையின் விலை பாதிக்கப்படுகிறது. இருப்பினும், தேங்காய் எண்ணெயின் விலை இறக்குமதி செய்யப்படும் பாமாயிலின் விலையால் பெரிதும் தாக்கத்திற்கு உள்ளாகிறது.

மேலும், விலை முன்னறிவிப்புத் திட்ட குழு, கடந்த 15 ஆண்டுகளாக ஈரோட்டில் உள்ள அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் மற்றும் பெருந்துறை வேளாண் உற்பத்தி கூட்டுறவு மையத்திலும் நிலவிய தேங்காய் மற்றும் கொப்பரையின் விலை மற்றும் சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது. ஆய்வு முடிவுகளின் அடிப்படையில் அக்டோபர் '2023 வரை தரமான தேங்காயின் பண்ணை விலை ரூ.10 முதல் 12 வரை இருக்கும் மற்றும் தரமான கொப்பரையின் பண்ணை விலை கிலோவிற்கு ரூ.75 முதல் ரூ.80 வரை இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனை அடிப்படையில் விற்பனை முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

1. உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்
   வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
   தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
   கோயம்புத்தூர் 641003
   தொலைபேசி : 0422-2431405
2. இயக்குனர் மற்றும் முனை அதிகாரி
   நீர் மற்றும் புவியியல் ஆய்வு மையம்
   தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
   கோயம்புத்தூர் 641003
   தொலைபேசி : 0422-6611278

**தொழில் நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

பேராசிரியர் மற்றும் தலைவர்
வாசனை மற்றும் மலைத்தோட்ட பயிர்கள் துறை
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் 641003
தொலைபேசி : 0422-6611284

***மக்கள் தொடர்பு அலுவலர்***